**<u>நேரடி கவனம் / மிக முக்கியத்துவம்</u>**

அனுப்புநர்
திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
சமூக நல ஆணையர்,
சைதாப்பேட்டை, சென்னை—15

பெறுநர்
1. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) அனைத்து மாவட்டங்கள்.
2. கூடுதல் கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை—3.

ந.க. எண் 625 / ச.உ.தி 2 / 2017, நாள் 18.01.2019.

அய்யா,

பொருள் . சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – அனைத்து பள்ளி சத்துணவு மையங்களை நவீனமயமாக்குதல் மாசற்ற – புகையில்லா எரிவாயு இணைப்புகள் வழங்குதல் – எரிவாயு மான்யம் பெறுவதில் இடர்பாடுகளை களைதல் – தொடர்பாக.

பார்வை .
1. இந்திய அரசு, பெட்ரோலியத் துறை கடிதம் எண் பி 23015 / 7 / 2013 LPG, நாள் 11.1.2017.
2. மனித வள மேம்பாடு, பள்ளி கல்வித்துறை (மதிய உணவுத் திட்டப்பிரிவு) புதுடில்லி கடிதம் எண் எப் 1 / 1 / 2016 டெஸ்க் (MDM) நாள் 24.1.2017.
3. இவ்வலுவலகக் கடிதம் எண் 625 / 2017 / ச.உ.தி –2, நாள் 27.2.2017.

*******

பார்வையில் காணும் கடிதங்கள் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வை 1ல் காணும் இந்திய அரசு, பெட்ரோலியத்துறை கடிதத்தில் சத்துணவு மையங்களில் உபயோகிக்கப்படும் LPG எரிவாயுக்கான மானியம் அனுமதிக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 2ல் காணும் இந்திய அரசு, மனித வள மேம்பாட்டுத்துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறை (மதிய உணவுத்திட்டப்பிரிவு) புதுடில்லி அவர்களது கடிதத்திலும் எரிவாயுக்கான மான்யம் சத்துணவு மையங்களுக்கு அனுமதிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பார்வை 3ல் காணும் இவ்வலுவலக கடித வாயிலாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்)மற்றும் உதவி கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு எரிவாயு மான்யம் பெற நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

எனினும் சத்துணவு மையங்களில் உபயோகிக்கப்படும் எரிவாயு உருளைக்கான மான்யம் பெறுவதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் இருப்பதாக இவ்வாணையரகத்தின் கவனத்திற்கு செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு திட்டம்) அவர்களும் ஆய்வுக் கூட்டங்களில் மான்யம் பெறுவதிலுள்ள இடர்பாடுகள் குறித்து இவ்வாணையரகத்தின் நேரடி கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இத்தகைய சூழலில் LPG எரிவாயு உருளைகள் விநியோகிக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் 7.1.2019 அன்று நேரில் அழைக்கப்பட்டு சமூக நல ஆணையர் தலைமையில் அவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. 7.1.2019 அன்று சமூக நல ஆணையரகத்தில் நடைப்பெற்ற LPG எரிவாயு உருளைகள் வழங்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் கூட்ட நடவடிக்கைகளின் நகல் பார்வைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி எரிவாயு உருளை விநியோகிக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவன பிரதி நிதிகள் கூட்டத்தில் தெரிவித்தவாறு எரிவாயு உருளைக்குரிய மான்யம் பெறுவதை நன்கு நடைமுறைப்படுத்திட கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் வருமாறு

1. பள்ளி சத்துணவு மையத்தின் அமைப்பாளர் ஆதார் எண் – மான்யம் பெற பதிவு செய்யப்பட்டிருந்தால் ஆதார் அட்டையின் நகல் ஒன்றினை இணைத்து தொடர்புடைய LPG கம்பெனிக்கு அனுப்பி அந்த பதிவை முதலில் ரத்து செய்ய வேண்டும். தனி நபர் பெயரில் கட்டாயம் ஆதார் பதிவு தவிர்க்கப்பட வேண்டும்.
2. சத்துணவு மையத்திற்காக துவக்கப்பட்ட வங்கிக் கணக்கு எண் (வங்கிக் கணக்கு பாஸ் புத்தகம் முதல் பக்கப்படி) ஜெராக்ஸ் அடிப்படையில் மான்யம் விடுவிக்கப்படும் என எரிவாயு நிறுவனப் பிரதிநிதிகளால் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. எனினும் வங்கிக் கணக்கில் குறிப்பிடப்பட்ட சத்துணவு மையத்தின் பெயர் மற்றும் LPG எரிவாயு இணைப்பு கோரப்பட்ட சத்துணவு மையத்தின் பெயரும் ஒன்றாகவே இருத்தல் வேண்டும். இதில் மாறுபாடு இருந்தால் மான்யம் வழங்கப்படமாட்டாது எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.
3. LPG எரிவாயு உருளை விநியோகிக்கும் ஏஜென்சி நிறுவனத்திடமிருந்து எரிவாயு உருளையை சத்துணவு மையத்திற்கு எடுத்து வரும் நபருக்கு எக்காரணம் கொண்டும் எரிவாயுக்கான தொகை தவிர கூடுதல் பணம் வழங்கக்கூடாது. இது தொடர்பாக புகார் ஏதும் இருந்தால் கம்பெனி / விநியோகிக்கும் ஏஜென்சி நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

இக்கடிதத்துடன் எரிவாயு விநியோகிக்கும் நிறுவனத்தின் மாவட்ட வாரியான கள அலுவலர்கள் (Field Officers) பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண்கள் இணைக்கப்பட்டுள்ளது. எரிவாயு பெறுவதில் இடையூறுகள் ஏற்படின் அவர்களை தொடர்பு கொண்டு பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் முற்றுப்புள்ளி வைக்க கோரப்படுகிறது.

இதுநாள் வரை எரிவாயு இணைப்புகள் பெறப்படாத சத்துணவு மையங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மூலம் எரிவாயு இணைப்பு பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சத்துணவுத் திட்டத்தை செயலாக்கம் செய்யும் அனைத்து அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் அரசால் அனுமதிக்கப்படும் எரிவாயுக்கான செலவினம் கூடுதலாக இருப்பின் மான்யம் பெற்றபின் எரிவாயு உருளை வாங்க செலவினம் மேற்கொண்ட மைய அமைப்பாளருக்கு அத்தொகையை விடுவித்து ஆணையிடவும் கோரப்படுகிறது.

சுகாதாரமற்ற முறையில் புகை சூழ்ந்த விறகு மற்றும் கரி அடுப்புகளை அறவே ஒழித்து – நவீனமயமாக்கும் திட்ட செயல்பாட்டின் ஒரு பகுதியாக அனைத்து சத்துணவு மையங்களிலும் எரிவாயு இணைப்பு பெற்று பயன்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் தவறாமல் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

இக்கடிதம் பெற்று கொண்டதற்கான ஒப்புதலை அனுப்பிட கோரப்படுகிறது.

இணைப்பு – ஒன்று

ஒம்/– வே. அமுதவல்லி
சமூக நல ஆணையர்

நகல்

இணை இயக்குநர் (ச.உ.தி)
உதவி இயக்குநர் (ச.உ.தி)
கூடுதல் பிரதிகள் –4.

// ஆணைப்படி //

சமூக நல ஆணையருக்காக